

# திறவு கோல்

**ஆக்கம்**

**மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்**

**அனுசரணை:** புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு





உங்களுக்குத் தெரியுமா?

புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு, பாதுகாப்பான புலம்பெயர்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நாடளாவிய ரீதியில் நடாத்தி வருகின்றது. இச்செயற்திட்டமானது அதிகரித்துவரும் முறையற்ற வெளிநாட்டுப் பயணங்களைக் குறைத்து, முறையானதும் பாதுகாப்பானதுமான வெளிநாட்டுப்பயணத்தை ஊக்குவிக்கின்றது. இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் நடாத்தப்படுகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டங்கள் உங்களுடைய பிரதேசங்களிலும் நடாத்தப்பட வேண்டுமென நீங்கள் விரும்பினால் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண் 011 5325362. குறுந்தகவல் மூலம் தொடர்பு கொள்வதாயின் இலக்கம் 077 4410086.

முறையானதும் பாதுகாப்பானதுமான புலம்பெயர்தல் சமுதாயத்திற்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் என்பதே IOM இன் கொள்கையாகும்.
இலங்கை IOM இன் அங்கத்துவ நாடாக 1990 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது. IOM இன் அமைப்பு இலங்கையில் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அரசாங்கத்துடன் இணைந்து புலம்பெயர்ந்தோரின் நலன் கருதி சவால்களை எதிர் கொண்டு அதன் சேவைகளை வழங்கி வருகின்றது.

# திறவுகோல்




மு/ முல்லைத்தீவு ம.வி
முல்லைத்தீவு

அனுசரணை : புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு

## Message from the IOM Project Manager

Safe migration is about making an informed decision to move to another place within your own country or abroad. The prospective migrant should have enough information to make the decision to migrate in a humane and orderly way. The skills, attitude, and cultural understanding of the destination country that the migrants have are important role in ensuring safe and secure integration in the destination country.

Safe migration is a key concern in Sri Lanka and migrants across the world. IOM's Safe Migration Awareness Campaign aims to reduce the incidences of irregular travel overseas, thus reducing the risks of irregular migration. By providing information on safe migration to communities in areas with a high incidence of irregular migration, IOM enables potential migrants to make more informed choices before they embark on a journey. To avoid dangers people encounter on selecting irregular path to migrate, we encourage students to take the safe and regular path to pursue their dreams.

We would like to extend our best compliments for this school magazine which conveys our safe migration message!

Priyantha Kulatunge
Project Manager
AVRR - IOM
Sri Lanka.

# முன்னுரை

மு/ முல்லைத்தீவு மகா வித்தியாலய மாணவர்கள் ஆகிய நாம் இச் சஞ்சிகையை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சிடைகின்றோம்.

இச் சஞ்சிகையானது குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்டு காணப்படுவதாகவும் சிறுவர், பெண்களின் உரிமைகளை விளக்கும் ஒன்றாகவும் அமைகின்றது. இச் சஞ்சிகை மூலம் எமது சமூகம் திருந்தும் வழியில் பயணிக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகக் காணப்படுகின்றது. இதன்மூலம் சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் குறைத்து நல்ல தரமான மகிழ்வான ஒரு சமூகத்தை உருவாக்கமுடியும் என்பதே ஆசிரியர், மாணவர்களாகிய எமது நோக்கம் ஆகும்.

முல்லைத்தீவு
மாணவர் சமூகம்

# இதழின் உள்ளே.......


| உள்ளடக்கம் | பக்கம் |
| --- | --- |
| சிறுவர் உரிமைகளும் துஷ்பிரயோகமும் | 1 |
| திரைப்படத்தின் நன்மை தீமைகள் | 3 |
| ஆதிக்கத்தை அகற்றுவோம் | 5 |
| சிந்திக்க சில வரிகள் | 7 |
| இன்றைய உலகில் கையடக்கத் தொலைபேசியின் பாவனை | 9 |
| யுத்தத்தின் இழப்பு | 11 |
| சிறுவர் துஷ்பிரயோகமும் சமூகமும் | 12 |
| ஹைக்கூ கவிதைகள் | 15 |
| பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்போம் | 17 |
| தற்காலத்தில் சமுதாய சீர்கேடு | 19 |
| விவசாயியின் பெருமை | 21 |
| அதிக நேரம் | 23 |

தேசத்தின் எதிர்கால தூண்களாகவும் நாளைய வரலாற்றை செதுக்கும் சிற்பிகளாகவும், வருங்கால வாழ்வியல் சாதனைக் கரையில் கொலுவிருக்கும் கலங்கரை விளக்குகளாகவும் சிறுவர்கள் போற்றப்படுகின்றனர். பதினெட்டு வயதிற்கு குறைந்த பிரிவினரே சிறுவர்களாக சுட்டப்படுகின்றனர். உடல்ரீதியாகவும், உள ரீதியாகவும் பூரண வளர்ச்சி பெறாத தாங்களே வழிநடத்திச் செல்லும் ஆற்றலற்ற அகவையினை கொண்டமைந்துள்ளனர். இவர்களுக்கு துல்லியமான வழிகாட்டலும் போதிய பாதுகாப்பும் அளிப்பது சமூகத்தின் கட்டாய கடமையாகும்.




மூன்றாம் பிறைகளான இவர்களை முழு நிலவாக பிரகாசிக்கச் செய்ய வேண்டியது ஒவ்வொரு தனி மனிதனுக்குரிய பொறுப்பாகும்.

அடிப்படை மனித உரிமைகளை சுட்டப்படுகின்ற பலவற்றை சிறுவர்களும் பெற்றுள்ளனர். உயிர்வாழும் உரிமையும் உயிர் காப்புரிமையும், பிறப்பும், பிறப்புப் பதிவும், பெயர் பெறும் உரிமையும், இவர்களுக்கு உண்டு. மேலும் தேசிய இன உரிமை,பராமரிப்பு உரிமை, சுயசிந்தனை, சுதந்திரம் என்பனவும் காணப்படுகின்றது. கல்வி, சுகாதாரம், விளையாட்டு, ஓய்வு போன்றவற்றையும் பெற்றுக் கொள்ளலாம். பெற்றோரின் வழிகாட்டலில் விரும்பிய ஓர் இனத்தை, மதத்தை பின்பற்றலாம். பெற்றோருடன் சேர்ந்து வாழவும் பெற்றோர் பிரியுமிடத்து இருவருடனும் உறவைப் பேணிக் கொள்ளவும் உரிமை உண்டு. கருத்து வெளியிடவும், சமூக நடவடிக்கைகளில் பங்கு கொள்ளவும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. சங்கங்களை அமைக்கவும் அங்கத்துவம் பெறவும் செய்யலாம். போதைப் பொருள், பாலியல் வன்முறை போன்ற தீங்குகளில் இருந்து பாதுகாப்பு பெறவும் உரிமை பெற்றுள்ளனர்.

சர்வதேச ரீதியில் சிறுவர்களின் மீதான அக்கறை அதிகரித்தவண்ணமேயுள்ளது. 1924ம் ஆண்டு ஜெனிவாவில் சிறுவர்களைப் பாதுகாக்க சர்வதேச பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது. எனினும் சட்டரீதியான அங்கீகாரம் பெறாமையால் நடைமுறைப்படுத்தபடவில்லை பின்னர் 1959 ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் சிறுவர் நலனை பாதுகாக்கும் வகையில் பத்து அம்சங்களை உள்ளடக்கிய சிறுவர் உரிமைப்

பிரகடனம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவும் சட்ட வலுவற்றதாகவே அமைந்தது. 1979ம் ஆண்டை சர்வதேச சிறுவர் ஆண்டாக அடையாளப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அனைவரும் விழிப்புணர்வு பெற்றனர். 1996ம் ஆண்டு ஜனவரி 26ல் அறுபத்தியாறு நாடுகள் கையெழுத்திட்டன. அதே ஆண்டு செப்ரம்பர் 2ல் இச் சாசனம் நடைமுறைக்கு வந்தது. ஒரே நாளில் அதிக நாடுகள் கையெழுத்திட்ட சாசனம் என்ற பெருமையினை சிறுவர் உரிமைச் சாசனம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களை பாதுகாத்தல் சர்வதேச சமூகத்தின் சட்டரீதியான அக்கறையாக வுள்ளது. எனினும் சமகால வாழ்வில் குழந்தைகள் படும் அவலங்களை வருணிக்க முயன்றால் வார்த்தைகள் தீக்குளிக்கின்றன. இந்தியா, இலங்கை, நேபாளம் போன்ற நாடுகளில் சிறுவர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர். உலகளாவிய ரீதியில் 16.5 கோடி சிறுவர் தொழிலாளர்கள் உள்ளதாக உலகத் தொழிலாளர் சம்மேளனம் 2008ம் ஆண்டு விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கோலா, சூடான், ருவாண்டா, ஈரான் போன்ற நாடுகளில் அதிகளவான சிறுவர்கள் ஆயுதப் படையில் சேர்க்கப்பட்டுள்ளனர். யுத்தத்தின் போது கண்ணி வெடிகள் அகற்ற அலை அலையாக அனுப்பப்பட்டு மரணமடைகின்றனர். வறுமை, பட்டினி, நிர்ப்பந்தம், மரபுத் தொழில் காரணமாக விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர். தென்னாசியாவிலே பெண் குழந்தைகள் அழிக்கப்படுவதும், சீதனக் கொடுமை காரணமாக முதிர்ந்த ஆண்களுக்கு சிறுமிகளை திருமணம் செய்து வைப்பதும் தொடர்கின்றது.


பத்துக் கோடிக்கும் மேற்பட்ட சிறுவர்கள் ஆரம்ப அறிவு பெற வாய்ப்பின்றியும் , பதினாறு கோடிக்கு மேற்பட்டோர் வறுமையிலும் வாடுவதாக ஐ. நா சபையின் அறிக்கை குறிப்பிடப்படுகின்றது. வீதியோரங்களில் வாழ்க்கை நடத்தும் சிறுவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. பெற்றோரின் அக்கறை இன்மையால் பெற்றோரை பாதித்த ஏமக்குறைவு நோய்களிற்கும் உள்ளடக்கப்படு கின்றனர்.

இந்தியாவில் தீப் பெட்டி, பட்டாசு போன்ற தொழிற்சாலைகளிலும் கட்டட வேலை, உணவக வேலை போன்றவற்றில் பெருமளவான சிறுவர்கள் ஈடுபடுத்தப்படு கின்றனர். இலங்கையில் குடும்ப வன்முறை, பராமரிப்பு இன்மை, பெற்றோரின் மது பாவனை, தாய் வெளிநாட்டு வேலைவாய்ப் பிற்காகச் செல்லல் போன்ற காரணிகளால் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்த வண்ணமேயுள்ளன. இதனால் கல்வியில் இடைவிலகல், இலக்கின்றி அலைதல், போதைப் பொருள்பாவனை, சமூகக் குற்றச் செயல்கள் என சிறுவர்களின் வகிபாகம் உயர்ந்து செல்கிறது. தமிழ் திரைக் படக்காட்சிகளும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு துணை செய்கின்றன.

சிறுவர் உரிமை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட சூழல் வேண்டும். குழந்தைப் பூக்களை இம்சைப்படுத்தாது வேலைச் சுமையை திணிக்காது மெல்லணர்வுடன் கையாளும் சமுதாயம் கட்டியெழுப்பப்படட்டும். சமுதாய இழிவுகளை களைத்து ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்த சர்வதேச சமூகம் திட சங்கற்பம் பூணட்டும். பிஞ்சு நிலாக்களின் இருள் கவிந்த வானம் விடிவெள்ளியாகட்டும்.

By:- Sariya
O/L

விஞ்ஞானம் தந்த வியத்தகு அற்பு தங்கள் பல அவற்றுள் திரைப்படம் ஒன்று. இன்று மக்களிடையே அதிக செல்வாக்குப் பெற்ற சாதகமாக விளங்கு வதும் இதுவே. மக்கள் தம் உள்ளங்களில் மட்டுமன்றி அவர் தம் வாழ்க்கையிலும் பிரிக்க முடியாத ஓர் அம்சமாகத் திரைப் படக்கலை இன்று ஊடுருவிவிட்டது திரையரங்குகள் தோன்றிவிட்டன.



# திரைப்படத்தின் நன்மை தீமைகள்

மக்களின் இன்றைய முக்கிய பொழுது போக்கும் திரைப்படமே. சிறுவர் முதல் பெரியோர் வரை ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் கண்டு மகிழ்வதும் அதுவே. இதனால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு.

உழைத்துக் களைத்த மக்களுக்கு ஒரு வகையான இன்பத்தைக் கொடுப்பது திரைப்படம் வெறும் பொழுது போக்கு மட்டுமன்றி நல்ல போதனைக்குரியதாகவும் திரைப்படம் விளங்குவதுண்டு. இதனால்தான் நூறு பொதுக் கூட்டங்களை நடத்திப் போதனை அளிப்பதன் பயனை ஒரு திரைப்படத்தின் மூலம் பெற்றிடலாம் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. மொழிப்பற்று, இறைபற்று, நாட்டுப்பற்று, இனப்பற்று ஆகியவற்றை உணர்த்தும் திரைப்படங்களு முண்டு. கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, பொய் பேசாமை போன்ற வள்ளுவர் தம் கருத்துக்களை வடிவமைத்துக் கொடுக்கும் திரைப்படங்களும் உண்டு. சாதி பேதம் போன்ற வேற்று மைகளைக் களைந்து எல்லோரும் அந்நாட்டு மன்னர் என்னும் உயரிய கருத்துக்களைப் புலப்படுத்தும் திரைப்படங்களும் உண்டு. இத்தகைய படங்களின் மூலம் திரையரங்குகள் மக்களிடையே வேறுபாடு மறையும் இடங்களாக விளங்குகின்றன.

திரைப்படங்கள், பலவகைப்படும். செய்திப்படங்கள், விளக்கப்படங்கள்,

அறிவியல் படங்கள், சமூகப்படங்கள், புராணப்படங்கள் ஆகியவை திரைப்படங்களாகின்றன. இவற்றின் மூலம் செய்திகளை அறியவும் அறிவியல் அறிவுபெறவும் சமூக ஒற்றுமை காணவும் இறைபற்றுக் கொள்ளவும் முடியும். மனித வாழ்வின் இன்றியமையாப் பண்புகளை விழுமியங்களை அறிந்துகொள்ளவும் குடும்ப வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய நன்னெறிகளை அறிந்து நடக்கவும் சமூகத்திற்குகந்த நல்ல மக்கள் உணர்ந்து செயற்படவும் திரைப் படக்கதைகள் உதவுகின்றன.

இதேவேளையில் திரைப்படங்களால் ஏற்படும் தீமைகளை நாம் கருத்திற் கொள்ளுதல் அவசியமாகும். திரைப்படங்களில் இடம்பெறும் கருத்தினைக் கவனிக்காமல் நாம் காட்சிக்கு அடியாமையாகிறோம். பாத்திரங்களின் நடை, உடை, பாவனை களைப் பின்பற்ற முனைகின்றோம். எவற்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமோ அவற்றைக் கொள்ளாமல் தள்ள வேண்டியவற்றைத் தள்ளாமல் தடுமாறுகின்றோம். தப்பானவற்றைக் கைகொள்ள முற்படுகின்றோம். கொலை, கொள்ளை, களவு, பாலியல் உணர்வுகளைத் தூண்டும் படங்களைப் பார்ப்போம். மனம் பேதலிப்புறுகின்றது. இவற்றைக் குடும்பத்தோடு திரையரங்குகளில் பார்க்கவே மனம் கூசும் நிலை உருவாகிறது. இத்தகைய திரைப்படங்களால் தீமையே விளைகிறது. நாகரீகம் என்ற பெயரால் பணம் ஒன்றையே குறிக்கோள்களாகக் கொண்டு படைக்கப்படும் திரைப்படங்களால் பண்பாட்டில் சீரழிவுகள் பெருகுகின்றன.

இன்று திரைப்படத்துறையைப் பொறுத்தவரையில் அதனால் ஏற்படும் நன்மைகளை விடத் தீமைகளே கண்ணில் படுகின்றன. இந்நிலை மாறவேண்டும்.

தீமைகளை விட நன்மைகளே கண்ணில் படுமாறும் கருத்தைப் கவருமாறும் திரைப்படங்கள் அமைதல் வேணடும்.

சுருங்கக் கூறுமிடத்து மக்களுக்கு நன்மை பயக்கும் நோக்கில் உருப்பெற்ற திரைப்படத்துறை பாதை தவறிச் செல்வதை விடுத்துச் சரியான பாதையில் செல்லல் வேண்டும். நல்லனவற்றை மக்களுக்கு உணர்த்திட வேண்டும். காலத்தின் கண்ணாடியாக மக்கள் வாழ்க்கைக்குப் பயன் தரும் அம்சங்களைக் கொண்டதாக அவர்கள் தம் உள்ளத்துக்கு இன்பமும் புத்துணர்வும் ஊட்டுவதாக அமைதல் வேண்டும்.


ஆபாசக் காட்சிகளையும், இரட்டை அர்த்தம் கொண்ட பாடல்களையும் புறந்தள்ளி, சமுதாயத்திற்கு பயன்தரும் அறிவுபூர்வமான கருத்துக்களைத் தருவனவாக திரைப்படத்துறை மாற வேண்டும். இன்றைய சூழ் நிலையில் இதனையே மக்கள் விரும்புகின்றனர்.

நல்லவனவற்றை ஏற்றுத் தீயனவற்றை விலக்கிடும் பண்பு நமக்கு வேண்டும். திரைப்படங்களை முற்றாக ஒதுக்கித் தள்ளுவதோ அவற்றின் கருத்துக்களை நிராகரிப்பதோ நமது நோக்கமாக இருத்தல் ஆகாது. நல்லனவற்றைக் கொள்ளவும் தீயவனவற்றை கொள்ளாது விடவும் நாம் பழகிக் கொண்டால் திரைப்படத்துறை சீர் பெறும். எனவே நன்மையைக் கொண்டு வாழ்வில் நலம் பெறத் திரைப்படத்தைப் பயன்படுத்துவோமாக!

By:- S.சயந்தரூபி

மொழி என்பது சமூகத்தின் கண்ணாடி. சமூகத்தின் மேன்மைகளை மொழி பிரதிபலிப்பது போலவே சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், இழிவுகள் போன்றவற்றையும் மொழி பிரதிபலிக்கும். அதிலும் சாதியும், ஆணாதிக்கம் இரண்டும் தமிழ்மொழியில் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஆதிக்கம் செலுத்துகின்றன.

ஒரு பெண்ணின் மீது பாலியல் ரீதியாக நிகழ்த்தப்படும் தாக்குதல்களைக் குறிக்க



# ஆதிக்கத்தை அகற்றுவோம்

கற்பழிப்பு எனும் சொல்லை பயன்படுத்து கிறார்கள். இந்த சொல்லிலுள்ள கற்பு விவாதத்துக்குரியது என்பதாலும் பெண்கள் மட்டுமன்றி சிறுவர்கள், சிறுநங்கைகள், ஆண்கள் போன்றோரும் பாலியல் ரீதியாக தாக்கப்படுவதைக் குறிக்கிறது. பாலியல் வல்லறவு , பாலியல் பலாத்காரம், வன்புணர்ச்சி போன்றவற்றை குறிப்பிடலாம்.

அறிவு வெளியிலும் ஆண்மொழி ஆதிக்கம் செலுத்துவது உண்மையான ஒன்றாகும். புத்தகம், சிந்தனை, கலை என்றாலே அது ஆண்கள் தொடர்பான விடயம்போல் வாசகன், எழுத்தாளன் போன்ற " ன்" விகுதியில் முடியும் சொற்கள் தான் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

பொது வெளியில் பெண்களின் பங்கேற்பும் பெண்ணுரிமை சார்ந்த விழிப்புணர்வும்,பரவலாகக் காணப்படும் இந்தச் சூழலில் நாம் ஆண் மொழியின் ஆதிக்கத்தை அகற்றியே ஆக வேண்டும் இதன்முதல் படியாக அன்றாட வாழ்வில் பேச்சிலும் எழுத்திலும் பல மாற்றங்களை நாம் செய்தாக வேண்டும். தவிர்க்க வேண்டியவை பயன்படுத்த வேண்டியவை தொடர்பான பரிந்துரைகள் இதோ

தவிர்க்க - இந்தச் சாதனையை முறிய டிக்க எவராலும் முடியாது

பயன்படுத்துக - இந்தச் சாதனையை முறியடிக்க யாராலும் முடியாது

தவிர்க்க - மனிதன் வியக்கத்தக்க அறிவியல் சாதனைகளை புரிந்திருக்கிறார்

பயன்படுத்துக - மனிதன் வியக்கத்தக்க அறிவியல் சாதனைகளை புரிகின்றார்


தவிர்க்க - விதவை, கைம்பெண்

பயன்படுத்துக - கணவனை இழந்தவர்

தவிர்க்க - வாசகன், எழுத்தாளன், கலைஞன், ரசிகன், கவிஞன்

பெரும்பாலான இடங்களில் "ர" விகுதியையோ, பன்மை விகுதியையோ பயன்படுத்தினாலோ நாண, நாம் ஆண்மொழியின் ஆதிக்கத்தைக் குறைத்து விடலாம்.

By:- இ. ஜென்சி
2016 (Arts)



# சிந்திக்க
# சில வரிகள்

" உன்னை
நீ நம்பினால்
உலகம் ஒரு நாள்
உன் பின் வரும்"

"வாழ்க்கையில் யாரையும்
சார்ந்து வாழ்ந்து விடாதே
உன் நிழல் கூட ஒளி
உள்ளவரை தான்
பின் தொடரும்"

" சாவதற்குள் சாதிப்பாய்
வேண்டியவை
உடலை சுமக்க நாலுபேர்
உள்ளத்தில் சுமக்க
ஒருவரை யேணும்"


" முயலும் வெல்லும்
ஆமையும் வெல்லும்
ஆனால் முயலாமை
என்றும் வெல்லாது



" வாழ்க்கைப்பயணம்
கரடு முரடானது
தயங்காமல் ஓடு
ஒரு நாள் உன்
இலக்கை அடைவாய்"

" தோற்றாலும் நம்பிக்கையோடு
இரு
ஆனால் யாரையும் நம்பி
தோற்று விடாதே
அதன் வலி மரணத்தை
விட கொடியது"

" மனித நாக்கு எலும்புகள்
இல்லாதது தான் ஆனால்
அது ஓர் இதயத்தையே
உடைக்கும் அளவிற்கு
வலிமை கொண்டது"



வாழ்க்கையில் ஜெயிக்க நண்பன் தேவை
வாழ்க்கை முழுவதும் ஜெயிக்க
எதிரிகள் தேவை

வ. ஷாலினி
2015^A *Arts*



# இன்றைய உலகில் கையடக்க தொலைபேசியின் பாவனை

"மாறுதல் இந்த யுகத்தின் முதலாவது விதி " என்கிறார் மகாகவி பாரதியார். சமுதாயம், அரசியல், சமயம், மொழி, இலக்கியம், நடனஉடை, தொழில் நுட்பம் என அனைத்துத் துறைகளிலும் மாறுதல்கள் இடம் பெற்ற வண்ணம் உள்ளன. அந்த வகையில் " பழயன கழிதலும் புதியன புகுதலும் வழமையானதே."

இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் வியத்தகு மாற்றங்கள் பலவற்றை சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். தொலைபேசியை கிரகம்பெல் கண்டுபிடித்தார். அந்தக் காலத்தில் இருந்து தொடர்பு சாதன உலகில் ஓர் புதுயுகம் ஆரம்பமானது. சந்தைப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து கொண்டே வருகின்றன. தொலைபேசி கண்டுபிடிப்பின் பின் 1976ம் ஆண்டு நெதர்லாந்து நாட்டினைச் சேர்ந்த Dr.J பிராண்டா லாக்கர் என்பவர் செல்போனைக் கண்டுபிடித்தார். " செல்போன்" இந்தச் சொல்லைக் கூட அறியும் படித்தவர் முதல் பாமர மக்கள் வரை செல்போன் பயன்படுத்தாதவர் எவருமில்லை என்றால் மிகையாகாது. இந்தக் கைத்தொலை பேசி பாவனை அநேக நன்மைகளைத் தந்தாலும் தீமைகளையும் ஏற்படுத்துகின்றது. உலகில் எந்த மூலையில் இருக்கும் ஒருவரோடும் அருகில் இருப்பவர்களோடும் உரையாடுவது போலவே உரையாட முடிகிறது. செல்போன் வசதியினால் பிரிவுத் துன்பத்தை மறக்க முடிகிறது.

ஆரம்ப காலங்களில் புகையினை உண்டாக்கியும் , புறாவின் மூலம் செய்தி அனுப்பியும் வாழ்ந்த மனிதன் கைத்தொலைபேசி பாவனை மூலம் ஓர் உயரத்தை எட்டி இருக்கின்றான். கடிதங்களையும், தந்திகளையும் அனுப்பிவிட்டு பதிலுக்காக காத்திருந்த

காலம் கரைந்தோடிப் போய் விட்டது. செய்திகளை உடனுக்குடன் பரிமாறிக் கொள்ள முடிகின்றது. குறும் செய்திப்பரிமாற்றம் (sms) தொழில் நுட்பத்தின் ஒரு மைல் கல் என்றே சொல்ல முடியும்.


அத்துடன் வங்கி நடவடிக்கைகள், கட்டணங்கள் செலுத்துதல் மற்றும் இன்ரனெற், ஈமெயில் வசதிகளையும் கைத்தொலைபேசி மூலம் பரிமாற முடிகின்றது. இவ்வாறு பல நன்மைகளைத் தரும் செல்போனில் ஒரு சில குறைபாடுகளும் காணப்படுகின்றன.

நவீன உலகை சந்தைப் போட்டியில் போட்டி போட்டுக் கொண்டே செல்போன்கள் உற்பத்தியாகின்றன. விற்பனையும் ஆனால் நவீன முறையில் உருவாகும் செல்போன்கள் பல இடர்களையும் ஏற்படுகின்றது. பள்ளி மாணவர்கள் கூட செல்போன் பயன்படுத்தும் நிலையில் உள்ளனர். இதனால் தப்பான உறவுகள் ஏற்பட்டு தற்கொலை வரை சென்று முடிகின்றது என்பது கண்கண்ட உண்மை.

ஆபாச படங்களைச் செல்போனில் பார்க்கின்றனர். இதனால் கைதாகி பொலிஸ் நிலையம் வரை செல்கின்றனர். ஆனபோதிலும் யாரும் திருந்துவதில்லை. அத்துடன் கைத்தொலைபேசியில் இருந்து வெளியேறும் கதிர்பு சக்திகள் புற்று நோயை உண்டாக்கின்றன என்பது சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்ட உண்மை. எவை எப்படி இருப்பினும் கைத்தொலைபேசிகள் இன்று அன்றாட வாழ்வின் அம்சமாகி மக்களின் நடைமுறைகளிலும் ரசனைகளிலும் கூடிய செல்வாக்குச் செலுத்துகின்றன.

புதிய விழுமியங்களும் புதுமையின் நாட்டமும் வர அவை காரணம் ஆகின்றன. எனினும் பல வல்லமைகளையும் பொறுப்புக்களையும் தன்கையில் எடுத்துக் கொண்டுள்ள மனிதன் தன் செயல்களுக்கு பதில் கூறும் கட்டுப்பாடு உடையவன் ஆகின்றான். எனவே தொழில் நுட்பத்தின் வளர்ச்சியினை மனிதன் சரியான முறையில் பயன்படுத்துதல் மிக மிக அவசியமாகும் என்பதில் முற்றும் ஐயம் இல்லை.

By:- த. தர்மிகா
2016 (Arts)



# யுத்தத்தின் இழப்பு


அன்று நாம் சிந்திய இரத்தம்
இன்றும் எமக்கு வலிக்கின்றது
அன்று நாம் இழந்த தோழர்கள்
இன்றும் மனதில் நீங்கா நிஜங்களாய்

எப்போது நாம் செய்த பாவமோ
இப்போது எம்மை வாட்டி வதைக்கிறது.
அன்று நாம் யுத்தத்தில் இழந்த இரத்தம்
இன்றும் எம் கண்ணீராக வழிகின்றது.

நாம் சிந்தும் கண்ணீரே
மழையாய் பூமியை அடைகிறது
அதைப் பிடிக்கவும் முடியாது
அதை அழிக்கவும் முடியாது

அன்று நாம் இழந்த நண்பர்கள்
இன்று எம் வீட்டுத்தோட்டத்தில் மலர்களாய்
என்றும் அழியாத ஞாபகங்கள்
எம் மனதில் நீங்காத சுடர் ஒளிகளாய்

By:- கோ. கஜனி
8A



விஞ்ஞானத்தின் வியனுற வளர்ச்சியில் இன்றைய உலகம் சொக்கிக் கிடக்கின்றது. தொழில்நுட்ப வளர்ச்சியை விழி விரித்து வியக்கின்றது. களியாட்ட நிகழ்வுகள் சமூக விழுமியங்களின் ஆணிவேரை மூடிக்கிடக்

# சிறுவர் துஷ்பிரயோகமும் சமூகமும்

கின்றன. இவை எல்லாம் ஒருபுறம் கிடக்க இளஞ் சிறார்களின் எதிர் காலத்தைக் குழிதோண்டிப் புதைக்கின்ற கொடூரச் செயற்பாட்டிலும் சமூகத்தின் ஒரு பகுதியினர் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.



" சிறுவர் இந் நாட்டின் தூண்கள்"

" சிறுவர்கள் எதிர்கால மன்னர்கள்" என்றெல்லாம் மேடைகளிலும், கவிதைக ளிலும் முழங்குகின்ற தமிழ்ச்சமூகம் கண் முன்னே அரங்கேறுகின்ற சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி கண்டுகொள்வதாக இல்லை. அரசியல், பொருளாதார அந்தஸ்துக்களின் அடியாகத் தோன்றிய அதிகார மனப்பான்மையை நிலை நிறுத்துவதற்காகப் பல்வேறு துஷ்பிரயோகங்களையும் சமூகத்தின் மேல் மட்டத்தினர் செய்து வருகின்றனர். அதில் சிறுவர் துஷ்பிரயோகமும் ஒன்று.

பிள்ளைகளின் கல்வி உரிமையை மறுத்தல், அவர்களின் அபிலாசையைச் சிதைத்தல், சிறுவயதில் வேலைக்கு அமர்த்துதல், பாலியல் ரீதியான துன்புறுத்தல் களுக்கு உள்ளாகுதல், தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துதல், சிந்திக்கும் ஆற்றலை மறுத்தல் முதலானவற்றையே பொதுவாக சிறுவர் துஷ்பிரயோகம் எனலாம். சிறுவர்களின் ஒட்டு மொத்தமான உரிமைகளையும் மறுதலித்து அவர்சளைக் கையறு நிலைக்கு உள்ளாக்குதல்

சிறுவர் துஷ்பிரயோகம் எனப்படுகின்றது.

இயற்கையையும், செயற்கையையும் சேர்த்து இழைத்த இன்னல் சுவட்டில் எமது இளந்தலைமுறை இரத்தம் கசிய நடந்து கொண்டிருப்பது ஏன் எமது சமூகத்தின் கண்களுக்குத் தெரியவில்லையா? இலங்கையில் இனப்போரால் நிகழ்ந்த அழிவுகள் , கல்விகள், உடல் ஆரோக்கியம், விவேகம், தற்துணிவு , தன்நம்பிக்கை என பலவற்றையும் சிறுவர்களிடமிருந்து பிடுங்கித்திண்டுவிட்டது. யுத்தத்தின் பெயரால் ஆயிரக்கணக்கான சிறார்களின் உரிமைகள் உருக்குலைக்கப்பட்டுவிட்டன. அங்கங்களை இழந்து அங்கவீனர்களாக்கி வாழ்க்கையின் எதிர்காலம் புரட்டிப் போடப்பட்ட நிலையில் எத்தனை இளம் சிறார்கள் முகாம்களில் முகம் சுருங்கிக் கிடக்கிறார்கள் என்பதை இன்றைய ஆடம்பரச்சமுதாயம் அறிந்து கொள்வதாயில்லை.

இன்றைய சமூகத்தில் நிலவுகின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு ஒரு காரணம் எனலாம். ஓரிடத்தில் செல்வம் மிதமிஞ்சிக் கிடக்கிறது. இன்னோரிடத்தில் அடுப்படி பூத்துக்கிடக்கின்றது. குடும்பத் தலைவன் குடித்துவிட்டு வீதியில் கிடக்கிறான். கையில் பணமில்லை, வீட்டில் உணவில்லை இதனால் குடும்பத்தை உழைத்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அக் குடும்பத்தில் வாழ்கின்ற சிறுவர்களின் தலையில் சுமத்தப்படுகின்றது. பள்ளி சென்று படிக்க வேண்டிய வயதில் இளம்சிறார்கள் வேலைத்தளங்களில் சென்று கூலி வேலை செய்கிறார்கள். புத்தகப்பை சுமக்க வேண்டிய முதுகில் மூட்டை சுமக்கிறார்கள். கட்டிட வேலைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அவர்களின் வயதுக்கு மீறிய அவர்களின் உடல் வலிமைக்கு மீறிய சுமை அவர்கள் மீது சுமத்தப்படுகின்றது. வேலை செய்யும் வேளையில் போதியளவு உணவோ, சுத்தமான குடிநீரோ வழங்கப்படுவதில்லை. காலையிலிருந்து பொழுது சாயும் வரை சிறுவர்களை அடித்து விரட்டி வேலை வாங்குகிறார்கள். வேலைக்குத் தக்க கூலியும் வழங்கப்படுவது இல்லை. மொத்தத்தில் இன்றைய சிறுவர்கள் அடிமைகளாகவே வேலை வாங்கப்படுகிறார்கள்.

வேலைத் தளங்களில் சிறுவர்களைப் பாலியல் ரீதியில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குகின்ற கொடுமைகளும் இடம்பெறு கின்றது. வளர்ந்த நாடுகளைச் சேர்ந்த அடிமை வியாபாரம்



செய்கின்ற கொடியவர்கள் சிறுவர்களைப் பிடித்து வேலைகளுக்காகவும், பாலியல் தொழில் செய்வதற்காகவும் விற்கின்றனர். ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் இக் கொடுமை தாராளமாக அரங்கேறிய போதிலும் அரசாங்கங்கள் அதைக்கண்டு கொள்வ தாயில்லை.

சிறுவர்களை வீட்டுவேலைகளுக்கு நியமித்தல், அவர்களுக்கு உடற்காயங்கள் ஏற்படும் படியாக தாக்குதல், தகாத வார்த்தைகளால் ஏசுதல் என்பன துஷ்பிரயோகத்தின் பாற்பட்டவையே. ஒரே வீட்டில் வீட்டுக்காரச் சிறுவன் நல்ல ஆடைகளை அணிந்து பாடசாலை படிக்கச் செல்லும் காட்சியையும், அந்த வீட்டில் வேலை செய்யும் சிறுவன் சீரற்ற ஆடைகளுடன் தொண்டுகள் செய்கின்ற காட்சியையும் காண்கின்றோம். பிஞ்சு மனதில் மிகப் பெரிய பாதக விளைவை இது ஏற்படுத்தும். இதனால் தாழ்வு மனப்பான்மை மாத்திரமின்றி பழிவாங்கும் உணர்ச்சிகள், வன்முறை உணர்வுகள் என்பனவும் உருத்திரளும்.

அண்மைக் காலங்களில் ஐக்கிய நாடுகள் சபையில் யுனஸ்கோ முதலான சிறுவர் சமவாயங்கள் சிறுவர் துஷ்பிரயோக த்தைத் தடுப்பதிலும், சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் தீவிர கவனஞ்செலுத்தி வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகளுக்கான பொறுப்பதிகாரி சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர் களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என முன்மொழிந்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

இன்றைய சமூகம் புத்திஜீவிகளும் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும். கல்விச் செல்வம், கேள்விச் செல்வம் முதலான சிறுவர்களுக்கு உரித்தான உரிமைகள் ஆட்சியாளராலும், சமூகத்தில் அதிகார பீடத்தில் இருப்பவர் களாகவும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

By:- து. நிதுஷா
தரம் 10




K.Heemsha
A/L Arts, (2016)

# ஹைக்கூ கவிதைகள்

**தாமரை**

சூரியனின் வரவுக்காக கைகளை
அகல விரித்தன

**அன்பு**

அன்னையின் உறைவிடம்
ஆறுதலின்
இருப்பிடம்

**நிறைவு**

சில்லறை விழவில்லை எனினும்
நிறைந்தது மனது
கொஞ்சமான கைதட்டலில்

**கண்ணாடி**

உன்னில் என்னை
காட்டும் விம்ப மாயாவி

**கடல்**

எமது உயிர் போனாலும்
உன் சத்தம் ஓயாது

**மனம்**

அன்றோ குரங்கு போல்
தாவினாய்
இன்றோ குரங்காகவே ஆகிவிட்டாய்

**இசை**

பிறந்த குழந்தைக்கு தாயின்
தாலாட்டு இசை
ஆனால் தாய்க்கோ குழந்தை
முதல் வார்த்தை இசை

## புயல்

நீ பூமியில் மையம்
கொண்டால்
மழை மண்ணில் உண்டு

## கடவுள்

உன்னை என்னால்
உணர முடியும்
ஆனால் உருவம்
எங்கே

## மது

நானோ உன்னை
பிடித்தேன்
நீயோ என்னை
விடவில்லை

## நிலவு

நாமோ இறந்து
மண் புகைகின்றோம்
நீ ஒரு நாள் மண்ணில்
இறங்கினால் என்ன

## காற்று

என்னையோ நீ
உரசிச் செல்கின்றாய்
உன்னை தொட என்னால்
முடியவில்லை

## போதை மருந்து

உன்னை உண்டால்
நீ உருகாமல்
என்னை உருக்குகின்றாய்

## அகதி

அகதி வாழ்வை விட
மண்ணில் புதைந்து
போவது மேல்

## அன்னை

உன்னை
காணவே
கண்கள்
வாங்கினேன்

By:- பு. ஷோபனா
2015 A Arts

மாதா, பிதா, குரு, தெய்வம் என்கின்ற சம்பிரதாயங்களில் திளைத்திருக்கும் நாம் பெண்களை மனிதப் பிறவியின் உருவாக்கத்திற்கான பிறவியாகப் பார்க்கின்றோம். அன்பு, கருணை போன்றவற்றின் வெளிப்பாடுகள் பெண்மையிலிருந்தே பிறக்கின்றன பெண்களுக்கான உரிமைகளையும் பண்புகளையும் மதிக்க வேண்டியது ஆண்களின் கடமைப்பாடாகும்.

பெண் என்பவள் ஓர் அடிமைப் பொருள் அல்ல. அவளுக்கும் உரிமைகளில் சமபங்கு உண்டு. இல்லத்தின் அரசி என்று வர்ணிக்கப்படும் பெண்கள் இன்று பல்வேறு பட்ட போராட்டங்களுக்குள் தம்மை உட்படுத்தி அவற்றிலிருந்து வெளியேற முடியாது சிக்கித்தவிக்கின்றனர். ஆண்வர்க்கத்தின் மேலாதிக்க வெறித்தனம் இன்னும் முற்றுப் பெறவில்லை. இதனால் பெண்களின் விடுதலை நோக்கிய பயணத்தில்



# பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்போம்

தடைக்கற்கள் தோன்றிய் வண்ணமே உள்ளன.

சர்வதேசரீதியாகக் காணப்படும் பெண்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராகவும், பெண்களின் மீதான துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவும், முழுச் சமூகமும் கிளர்ந்தெழ வேண்டும். பெண்களின் இந்த நிலை குறித்து ஒவ்வொரு ஆணும் வெட்கப்பட வேண்டும் திருமண பந்தத்தில் நுழைய வேண்டிய பெண் சீதனம் என்கின்ற அநியாயத்தை ஆண் வர்க்கத்திடம் தாரைவார்க்க வேண்டியுள்ளது. ஆண்களின் சபதங்களுக்குப் பெண்கள் உள்ளாகித் துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். ஆண் மேலாதிக்க வெறியினால் பெண்கள் கொல்லப்படுவதும் தற்கொலை செய்வதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பெண்களும் ஆண்களுக்குச் சமமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பெண்களும் ஆண்களுக்குச் சமமாகத் தொழில் புரியும் இன்றைய நவீன யுகத்தில் கூட பெண்கள் மீது வரம்புமீறிச் செயற்படும் ஆண்களது நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

கிராமத்துப் பெண்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் அதிகாலையில் எடுத்து தமது நாளாந்தக் கடமைகளை ஆரம்பிக்கின்றனர். இரவுவரை இவர்களின் பணிகள் தொடர்கின்றன. ஓய்வு ஒளிச்சலின்றி பாடுபடும் இந்தப் பெண்களின் நிலை தொடர்பாக

எவருமே கவனத்தில் கொள்வதில்லை. இதே போன்று நகர்த்துப் பெண்களும் தமது நாளாந்தக் கடமைகளோடு பிள்ளைகளைப் பள்ளிக்கும் கணவனை அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டியதுடன் தாமும் அலுவலகம் செல்ல வேண்டியநிலையில் காணப்படுகின்றனர். இவர்கள் அலுவலகம் முடித்து வீடு திரும்பும் போது தமது குடும்பத்தின் சிந்தனையுடன் காணப்படுவார்கள். இவர்கள் தம்மைப்பற்றி சிந்திக்காமல் எப்போதும் தமது குடும்பத்தைப் பற்றியே சிந்திக்கின்றார்கள். வீட்டில் சமயலறையில் தொடங்கி அனைத்து விடயங்களிலும் பெண்ணே முன்னிலை வகிக்கின்றாள். இவை அனைத்தையும் பெண்களின் இயல்பெனக் கூறுகின்றோம். பெண்ணையும் அவ்வாறே நம்பவைக்கின்றோம். இயல்பு மீறும் பெண்களைத் திமிர் பிடித்தவள் என்கிறோம். நியதிகளை மீறி ஒரு பெண் இயல்பான தன்னுணர்வோடு ஒரு முடிவை எடுக்கும்போது அது குறித்து அவளைக் குற்றவுணர்வடையச் செய்யும் விதமாகவே சமூகத்தின் நடவடிக்கைகள் அமைந்துள் என.


வீடு, காணி என்பன எவ்வாறு அசையாச் சொத்துக்களாக உள்ளனவோ அவைபோன்று பெண் என்பவள் குடும்பத்தின் அசையும் சொத்தாக விளங்குகின்றாள். அன்பு, பாசம், கருணை, கடமை, பொறுப்பு என்னும் கயிறுகளால் பெண்ணைக் குடும்பத்தோடு பலமாக இறுக்கி வைத்திருக்கின்றோம். பெண்களது உரிமைகள் புதிப்பிக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்தாலும் போர், பயங்கரவாதம், தனிமை, தொழில்சார் விடயங்கள் போன்ற காரணங்களால் ஆண்வர்க்கத்தினர் பெண்களை இழிநிலைக் குள் தள்ளி விட்டுள்ளனர். பாடசாலைகளிலும் வேலைத்தளங்களிலிலும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களின் போதும் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்கள் எல்லைமீறிக் கொண்டே செல்கின்றன. வறுமை, கணவனின் பிரிவு என்பன பெண்கள் நிலை தடுமாறுவதற்குச் சாதகமான காரணங்களாகவுள்ளன. அரசியலமைப்பிலும் மனித உரிமைச் சட்டங்களிலும் பெண்களுக்கான பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தாலும் சில வேளைகளில் சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாகக் குற்றம் புரிகின்ற ஆண்கள் தப்பித்துக் கொள்கின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் சனத்தொகையில் சரிபாதி அளவு பெண்களாக இருக்கின்ற ஒரு நிலை காணப்படுகின்றது. இவர்கள் ஆண்களுக்கு சரிநிகராக எந்தத் தொழிலிலும் ஈடுபடுகின்ற போக்கும் காணப்படுகின்றது.

ஆனாலும் பெண்மையை எம்மில் எத்தனை பேர் மதிக்கின்றனர் என்பது கேள்விக்குரியாகவே உள்ளது.

ஐ.நா. சபையால் 1948 ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மனித உரிமைகள் மீதான பிரகடனத்தின் உறுப்புரிமை 7 ன் பிரகாரம் சட்டத்துக்கு முன் அனைவரும் சமம் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. பெண்கள் விடுதலை என்று வாய்கிழியக்கத்தினாலும் சிலரது போக்கில் மாற்றம் ஏற்படவில்லை. தாயும் பெண்ணே, தாரமும் பெண்ணே, தாயின் மடியில் சுவர்க்கம் உண்டு என்று பெண்களைப் போற்றுகின்ற அடிப்படையில் நாம் வாழ்வோமாக இருந்தால் பெண்களின் அந்தஸ்து உயரும் என்பது திண்ணம்.

By:- ஜெ. ஜதினி
2016 Arts




MENDIS
MD
Extra power ED
R. Jensy
AIL Arts (2016)

# தற்காலத்தில் சமுதாய சீர்கேடு

சமுதாயம் என்பது பல தனி நபர்களை கொண்ட ஒரு கூட்டமைப்பு ஆகும். இதில் இணையாமல் தனித்து ஓர் மனிதன் இயங்குவது சாத்தியமற்றதாகும்.இப்படிப்பட்ட தனி மனிதர்களின் கூட்டமைப்பான சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சினைகள் ஒவ்வொருவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

தற்கால சமுதாயத்தில் வன்முறை களும் கொலை, கொள்ளைகளும், போதைப் பொருட்களும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன் கொடு மைகளும் மனித குலத்தின் ஒழுக்கத்தை சிதைத்து சமுதாய சீர்கேட்டை ஏற்படுத் திக் கொண்டிருக்கின்றன. சமுதாயத்தில் தீமைகளும் ஒழுக்க சீர்கேடுகளும் உண்டாவ தற்கு எம்மில் சுயநலம் கொண்டோரின் செயல்களே காரணமாகும். அக் காரணங்களை சிந்தித்து பார்க்கலாம்.







சில பிள்ளைகளின் பள்ளிச் சூழலும் வீட்டுச் சூழலும் அவர்களை கல்வியில் பின்தங்க வைத்துக் கல்விக்கு ஓய்வு கொடுத்துவிடுகின்றது. நாளடைவில் இவர்கள் சமூக விரோத கும்பலாக உருவெடுத்து கொலை, கொள்ளை, வன்முறைகளையும் செய்கின்றார்கள்.

இதன் காரணத்தால் சமுதாயம் பாரிய சீர்கேட்டை எதிர்நோக்கி வருகின்றது. அரசாங்கத்தில் அமர்ந்திருப்போர் மக்களுக்கு செய்யவேண்டிய கடமைகளை புறக் கணித்து குறுக்கு வழிகளில் பணம் தேட ஆரம்பிக்கிறார்கள். தகுதி அடிப்படையில் பின்தங்கி தகுதியின்மைகள் அரங்கேறும் போது அரசாங்கம் பலவீனமடைந்து விடுகிறது. இதன் விளைவாக வரிச்சுமை, விலைவாசி உயர்வு போன்றவற்றால் ஒட்டுமொத்த சமுதாயமும் தள்ளப்படுகின்றது. இதன் தாக்கம் சமுதாயத்தில் கொலைகள், கொள்ளைகள், வன்முறைகள் போன்ற வற்றின் மூலம் பிரதி பலிக்கின்றது.

தற்கால சமுதாயத்தில் காணப்படும் சீர்கேடுகளில் பெண்களுக்கு எதிரான வன் கொடுமைகளை குறிப்பிட்டு சொல்லலாம். ஒருவன் தனது அதிகாரம், ஆளுமை என்பவற்றை பயன்படுத்தி பிறரை தன் கட்டுப்பாட்டுக்குள் உட்படுத்தும் போது அல்லது தனது குறிக்கோளை நிலைநிறுத்த முற்படும்போது வன்முறைகள் தோற்றம் பெறுகின்றன. பெண்களுக்கு எதிரான வன்முறை வீடுகளிலேயே பொதுவாக தோற்றம் பெறுகின்றது. குறிப்பாக கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான தகராறுகள், தந்தைக்கும் பிள்ளைக்கும் இடையிலான தகராறுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அத்தோடு மாமியார் கொடுமை

அடிதடி, பாலியல் பலாத்காரம் போன்ற பல்வேறு காரணங்களாலும் பெண்கள் வன் கொடுமைகளை எதிர் கொள்கின்றார்கள். இத்தகைய பாதிப்புக்கள் உடலில் வடுக்களையும் மாறுதல்களையும் உருவாக்கி மனதில் துயரத்தை தரக் கூடியவை. இவ்வாறான வன் கொடுமை களை உடல் ரீதியானவை எனலாம்.

பெண்களை அவமரியாதை செய்து அவர்களின் உணர்வுகளைப் பாதிக்கின்ற செயல்களை உளவியல் ரீயான வன்முறைக் கொடுமையாகக் குறிப்பிடலாம்.

1993 இல் இலங்கை அரசால் இலங்கை



பெண்கள் சமவாயம் அங்கீகரிக்கப்பட்டது என்பதனை இங்கே குறிப்பிட்டு சொல்லலாம். இது பெண்களுக்கு எதிரான வேறுபாடுகளை இல்லாதொழிக்கும். பெண்களுக்கான தீர்மானங்கள் எடுக்கும் துறைகள் பற்றி அரசாங்க பொறுப்பை வெளிப்படுத்தும் வெளியீடாகும். இணையத்தள பயன்பாடு, கைத் தொலைபேசி பாவனை என்பனவும் சமுதாயத்தை சீரழிக்கும் சக்திகளாகவே தற்காலத்தில் காணப்படுவது வேதனைக் குரியதாகும்.

இணையத்தளத்தில் பரவி வரும் ஆபாச படங்கள் மூலமாக சீரழிந்து போகும் இளைய தலைமுறையினரின் எ ண்ணிக்கை தற்காலத்தில் உயர்ந்து வருவதாக காணப்பட்டுள்ளது. இது கல்வித்துறையின் பின்னடைவையும் மது போதைப் பழக்கம் என்பனவற்றையும் இளம் தலைமுறை மத்தியில் ஏற்படுத்தி விடுகின்றது.

தற்காலத்தில் சமுதாயத்தில் காணப்படும் குடும்பங்களின் தனிப்பட்ட பொருளாதார நிலைமை சீரழிக்கின்ற விடயமாக புகைப்பழக்கம், குடிப்பழக்கம் உள்ளது என குறிப்பிடலாம்.

" மது நாட்டுக்கும் வீட்டுக்கும்
உயிருக்கும் கேடு"

என்று குறிப்பிட்டு வந்தாலும் குடிப்பழக்கத்திற்கு அடிமையாவோரின் எண்ணிக்கை அதிகரித்தே தான் செல்கிறது. இத்தகைய குடிப்பழக்கம் குடியை குடும்பத்தோடு சமுதாயத்தை சீரழிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. திருட்டு, கொலை, கொள்ளைகள், கற்பழிப்புக்கள் போன்ற சமுதாய சீர்கேடுகள் மேலோங்கும் போது பாதிக்கப்படுவது நாம் தான் எம் சகோதர சகோதரிகள் தான்.

சமுதாய மற்றும் ஒழுக்க சீர்கேடுகள் இல்லாது ஒழித்து தூய்மையான சமுதாயத்தை உருவாக்கும் கடமை நம்மில் ஒவ்வொருவருக்கும் உண்டு. அக் கடமையின் பொருட்டு திடமான மனதுடன், எழுச்சியுடன் சமுதாயத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் செயற்பட வேண்டும். இச் செயற்பாடு எதிர் காலத்தில் சமுதாய சீர்கேட்டை முற்றாக அல்லது ஓரளவுக்கு கட்டுப்படுத்த உதவும்.



By:- வி. நிதர்சனா
11A

# விவசாயியின் பெருமை



தாயின் கருவறையில் இருந்து
இத் தரணிமுதல் வந்தடைந்து – இவ்
உலகையே ஆளப்பிறந்த உழவர் – கூட்டமே

வானில் இருந்து நீருமில்லை மழைத்துளியும்
இல்லா எம் ஊரில் வரண்டு கிடந்த
நிலம் தனில் ஆழப்பிசைந்து – உழுதான்
அடங்கிக்கிடந்த புழுதி மண் இன்று
தினைகளால் மூடப்பட்டிருக்கின்றது.

ஒரு சாண் வயிற்றிற்கு கூழோ
ஆக்கி குடித்து தரணியில் வாழ்
மக்களை வாழவைக்கும் விவசாயியே
உம் பெருமை என்றும் போற்றப்படுவதாக


பனை ஓலை குடிசையிலே
வானத்தில் மிளிரும் நட்சத்திரத்தை
அண்ணார்ந்து பார்த்த படி கிடந்தான் – அவன்
தன் குழந்தைக்கு நிலாவினை காட்டி
சோறு ஊட்டினாள் தாய்

அதிகாலை எழுந்தவுடன் – கந்தனின்
முகமும் அகமும் அவனை இன்பத்துக்குள்ளாக்கிய
அவன் பூமிதனில் இல்லையென்றால்
கோனோ ஜனமோ இல்லை

அவனின் வியர்வையில் உழைப்பில்
பணக்காரரோ, செல்வந்தரோ அடிமை
என்பதை மறந்து அவனை பழிந்துரைக்கின்றனர்
இவ்வுலகில் அவனைவிட – செல்வந்தர்
யாருமில்லை என்பதை உணராத வலியவர்

கந்தன் மாட்டை அவிழ்த்து
உணவளித்து தண்ணீர் வைத்து
அதனை உழச் செய்வது முதல்
தினையினை அறுவடை செய்வது – வரை
அவன் தன் சுற்றத்தாரையே மறந்து
இன்பம் காண்கிறான்.

தன் வீட்டில் உலை கொதிக்குமோ
என்பது ஆச்சரியம் ஆனால்
பிறர் இல்லம் தனில் – ஓயாத
வெளிப்படையாய் அவன் தன் நாட்டின்
பண்டிதன் – இவற்றை கொடுப்பது தான்
விவசாயியின் தற் பெருமை.



By:- L . சுபா
2015 கலைப்பிரிவு




## அதிக நேரம்

தினசரி செல்போன் பேசுவோருக்கு உடலில் பாதிப்பு ஏற்படும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் உறுதி செய்யப்படவில்லை. இந்த நிலையில் இஸ்ரேலிலுள்ள, டெல் அவில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானியான டாக்டர். யனிவ் – ஹம்ஷானி தலைமையிலான குழுவினர் ஒரு புதிய ஆய்வை நடாத்தினர். அதன் படி அதிக நேரம் செல்போன் பேசுபவர்களை புற்றுநோய் தாக்கும் அபாயம் இருப்பதாக தெரிவித்துள்ளார்கள் அவர்கள் அதிக நேரம் செல்போன் பேசுபவர்களிடம் இருந்து எச்சில் எடுத்து பரிசோதனை செய்த போது புற்றுநோய் இருப்பதாக தெரியவந்துள்ளது. செல்போன் பேசும் போது காதுகளின் அடியில் உள்ள சுரப்பிகள் மற்றும் திசுக்கள் பாதிக்கப்பட்டு மரபணுக் கோளாறினால் புற்றுநோய் ஏற்படவாய்ப்பு உண்டாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

By:- சு. திரன்சியா
2014 Arts

உலம் வாழ்த்து


திறவுகோல்
நன்றி

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

முறையான புலம்பெயர்தல் பற்றிய தகவல்களைப் பெற:
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
011 287 9900 011 287 9901 011 287 9902

ஆட்கடத்தல் சம்பந்தமான பொலிஸ் இல.
ஆகாய வழி - 011 239 29 17
கடல் வழி - 011 232 01414

தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை
011 277 8911

நேரடி அழைப்பு சிறுவர் பாதுகாப்பு
1929

புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM)
011 253 25362
SMS : 077 441 0086

சரியான முறையில் வெளிநாடு செல்ல தேவையான 3 ஆவணங்கள் எவை ?

1. குடும்பப் புகைப்படம்
2. கடவுச் சீட்டு
3. விசா
4. தொழில் அனுமதிப்பத்திரம் (Work Permit)
5. தடுப்பூசிப் பத்திரம்

சரியான விடைகளை 077 441 0086 என்ற
இலக்கத்திற்கு கீழுள்ளவாறு SMS செய்து மாதாந்த அதிஷ்ட குலுக்களில்
பரிசில்களை வெல்லுங்கள்.
SMS விடைகள்: பெயர் - ஊர் - பால் - வயது

# Safe Migration Campaign




Copyright by IOM

**Crossing the boarders irregularly in search of greener pastures may leave you with nothing but tears!**

**ඉසුරු සොයා අවිධිමත්ව දේශසීමාවන් තරණය කිරීම ඔබට කඳුළු පමණක් ඉතිරි කරාවි!**

**வெளிநாடு செல்லும் பிழையான வழி**

**கண்ணீர் ததும்பும் கடின வலி!**

**For more information contact**
වැඩි විස්තර සඳහා
மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

**011 532 5362**

**077 44 100 86**

*Funded by the*

Australian Government
Department of Immigration and Border Protection

Canada

*Implemented by the*

IOM International Organization for Migration
IOM සංක්‍රමණය සඳහා වන ජාත්‍යන්තර සංවිධානය
IOM புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.